# DEPOSITION OF WITNESS

IN THE COURT OF I ADDL.DISTRICT & SESSIONS JUDGE, THOOTHUKUDI.

Case No. S.C.No.166/2024.
Prosecution witness for P.W.35.

| | | | |
|---|---|---|---|
| Name | ... திரு. மணிமாறன். | Caste | ... |
| Father's/Husband Name | ... | Calling | ... |
| Village | ... | Religion | ... |
| Taluk | ... | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 09.02.2026.

A1 to 3 present.

முதல் விசாரணை

நான் தற்போது பாரதி ஏர்டெல் லிமிடெட் நிறுவனத்தில் நோடல் அதிகாரியாக பணியில் இருந்து வருகிறேன். எங்கள் அலுவலகத்தில் ஜெயக்குமார் என்ற நோடல் அதிகாரி பணியில் இருந்தார். அவர் எங்கள் அலுவலகத்தில் இருந்து விடுவிக்கப்பட்டார். அவருடன் சுமார் ஒரு மாத காலம் நான் பணியாற்றியதால் அவரது கையொப்பங்கள் எனக்கு நன்றாகத் தெரியும். தூத்துக்குடி மாவட்டம் எட்டையபுரம் காவல்நிலைய குற்ற எண் 85/2024 வழக்கில் சம்பந்தப்பட்ட கைபேசி எண்களான 7538839159, 9791349999 மற்றும் 9597349999 என்ற எண்களுக்கான அழைப்புகள் சம்பந்தப்பட்ட உள், வெளி அழைப்புகள் சம்பந்தமான வாடிக்கையாளர் விண்ணப்பம் படிவம் 65 பி சான்றிதழுடன் காவல் ஆய்வாளர் எங்கள் அலுவலகத்தில் கேட்டிருந்தார். அதற்காக மேற்படி நோடல் அலுவலர் ஜெயக்குமார் கொடுத்த கவரிங் லெட்டர் **அ.சா.ஆ 33**. பிரிவு 65 பி படியான சான்றிதழ் **அ.சா.ஆ 34**. மேற்படி மூன்று எண்களுக்கான வாடிக்கையாளரின் விண்ணப்பங்களின் நகல்கள் **அ.சா.ஆ 35 வரிசை** (எண்ணிக்கையில் 3). அதில் முதல் படிவம் கைபேசி எண் 7538839159 என்ற எண் 1ம் எதிரி பெயரில் வாங்கப்பட்டுள்ளது. 9791349999 என்ற

கைபேசி எண் கண்ணுசாமி என்பவர் பெயரில் வாங்கப்பட்டுள்ளது. 9597349999 என்ற கைபேசி எண் அ.சா.20 பெயரில் வழங்கப்பட்டுள்ளது. 9791349999 என்ற பதிவெண் கொண்ட கைபேசி எண்ணிலிருந்து 01.04.2024 அன்று 16.27 மணி முதல் 17.20 மணி வரையில் கோவில்பட்டி வட்டம் திட்டங்குளம் கோபுரத்திலிருந்து 9080507627 என்ற எண்ணிற்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. 17.25 மணி முதல் 17.31 வரையில் கழுகாசலபுரம் கோபுரத்திலிருந்து 8610684015 என்ற எண்ணிற்கு 9791349999 என்ற எண்ணிலிருந்து அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. 9080110990 என்ற எண்ணிலிருந்து 9791349999 என்ற எண்ணிற்கு 17.31 மணியளவில் அழைப்பு வந்துள்ளது. அந்த பதிவும் கழுகாசலபுரம் கோபுரத்தில் பதிவாகியுள்ளது. 18.35 மணியளவில் ஒரு குறுஞ்செய்தி Air MCA விலிருந்து 9791349999 என்ற எண்ணிற்கு பெறப்பட்டுள்ளது. கோவில்பட்டி கோபுரத்திலிருந்து மேற்படி குறுஞ்செய்தி பதிவாகியுள்ளது. 9597349999 என்ற எண்ணிலிருந்து 15.24 மணியளவில் 01.04.2024 அன்று 8610684015 என்ற எண்ணிற்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. அந்த அழைப்பு கழுகாசலபுரம் கோபுரத்திலி பதிவாகியுள்ளது. அன்றே 15.38 மணியளவில் அதே எண்ணிலிருந்து அதே எண்ணுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. அந்த அழைப்பு திட்டங்குளம் கோபுரத்தில் பதிவாகியுள்ளது. அன்றே 17.37 முதல் 17.46 வரையில் கழுகாசலபுரம் கோபுரத்தில் பதிவான 9597349999 என்ற எண்ணிலிருந்து 8610684015 என்ற எண்ணிற்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. அன்றே 9597349999 என்ற எண்ணிற்கு 9080110990 என்ற எண்ணிலிருந்து அழைப்பு வந்துள்ளது. அன்றே 17.51 மணியளவில் 9597349999 என்ற எண்ணிலிருந்து 8610684015 என்ற எண்ணிற்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. அந்த அழைப்பு கோவில்பட்டி இலுப்பையூரணி

கோபுரத்தில் பதிவாகியுள்ளது. அன்றே 9597349999 என்ற எண்ணிலிருந்து 9080110990 என்ற எண்ணிற்கு 18.02 மணியளவில் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. அந்த அழைப்பு கோவில்பட்டி சுப்பிரமணியபுரம் கோபுரத்தில் பதிவாகியுள்ளது. இது சம்பந்தமாக மேற்படி மூன்று கைபேசி எண்களின் அழைப்பு விபரங்கள் 7538839159 என்ற எண்ணிற்கான 31.03.2024 முதல் 03.04.2024 வரையுள்ள காலத்திற்கான அழைப்பு விபரங்கள் அடங்கிய ஆவணம் **அ.சா.ஆ 36**. 9791349999 என்ற கைபேசி எண்ணுக்குரிய அதே காலத்திற்கான அழைப்பு விபரங்கள் அடங்கிய ஆவணம் **அ.சா.ஆ 37**. 9597349999 என்ற கைபேசி எண்ணுக்குரிய அதே காலத்திற்கான அழைப்பு விபரங்கள் அடங்கிய ஆவணம் **அ.சா.ஆ 38**. இது சம்பந்தமாக மேற்படி ஜெயக்குமாரை ஆய்வாளர் விசாரித்துள்ளார். அ.சா.ஆ 35 ல் விண்ணப்பத்தாரர்களின் அடையாள ஆவணங்களும் அதில் இணைக்கப்பட்டுள்ளன. மேற்படி ஆவணங்கள் எதிரிகள் தரப்பில் ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்பட்டன.

2ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

முதல் விசாரணை சங்கதிகள் எதுவும் எனக்கு நேரில் தெரியாது. முதல் விசாரணையில் குறியீடு செய்யப்பட்டுள்ள ஆவணங்களை தயாரித்த நபர் நான் அல்ல. அந்த ஆவணங்களின் உண்மைத்தன்மை என்பதும் எனக்கு தெரியாது என்றால் எனக்கு தெரியும். மேற்படி ஆவணங்களில் உள்ள தகவல்கள் கணினியில் ஏற்றப்பட்டு உண்மையான சங்கதிகள்தான் கணினியில் பதிவு செய்யப்பட்டதா என்பதும், அவைதான் இந்த வழக்கு ஆவண கோப்பிற்கு அனுப்பப்பட்டதா என்பதும் எனக்கு நேரில் தெரியாது. நான் 03.06.2025 முதல் மேற்படி பணியில் இருந்து வருகிறேன். எங்கள் நிறுவனத்திற்கு தமிழ்நாடு முழுவதும் ஒரே நோடல் அலுவலர் இருக்கிறார்

என்றால் மூன்று நோடல் அலுவலர் இருக்கிறார். மூன்று நோடல் அலுவலர்களுக்கும் எந்த எந்த பகுதி கொடுக்கப்பட்டுள்ளது என்றால் அப்படி கொடுக்கப்படவில்லை. நான் பிரிவு 65 பி பொறுத்தவரையிலும், வழக்கமான பணிகளுக்கும் நான் நோடல் அலுவலர். தமிழ்நாடு முழுவதும் ஏர்டெல் கைபேசிகளுக்கு ஒரு நோடல் அலுவலரும், DTH சேவைக்கு ஒரு நோடல் அலுவலரும் இருக்கிறார்கள் என்றால் சரியல்ல. ட்ராய் வலைதளத்தில் உள்ள சங்கதிகளும், எங்கள் நிறுவன வலைதளத்தில் உள்ள சங்கதிகளும் உண்மையானவை என்றால் சரிதான். என் அடையாள அட்டையில் என் பதவி நிலை குறிப்பிடப்படவில்லை. மேற்படி அடையாள அட்டையை சரிபார்க்கப்பட்டது. அதில் நோடல் அலுவலர் என்ற குறிப்பு இல்லை. எனக்கு நீதிமன்றத்தின் மூலம் சம்மன் சார்வு செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. அழைப்பாணையில் நோடல் அலுவலர் ஏர்டெல் என்று மட்டும்தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஒரு நோடல் அலுவலர் எந்த மண்டலத்திற்கு நியமிக்கப்பட்டிருக்கிறாரா அந்த மண்டலத்தை பொறுத்து அவர் பொறுப்பு என்றால் சரிதான். அந்த மண்டலத்தை TN and Puduchery circle என்று சொல்வார்கள். ட்ராய் வழிகாட்டுதலின்படி சிடிஆர் அறிக்கை கொடுப்பதற்கு நோடல் அலுவலர்தான் பொறுப்பு என்றும், அவருக்கு பிரிவு டெலிகிராப் சட்டம் பிரிவு 5 (2) உ/இ 419 (A) விதியின் படி BNS 94 ன் படி முறையான விண்ணப்பம் நீதிமன்ற அனுமதியின் பேரில் வந்தால் கொடுக்க வேண்டுமென்றால் சரிதான். புலன் விசாரணை அதிகாரி கேட்டாலும், நீதிமன்றம் கேட்டாலும் கொடுக்கலாம். 2025 ல் மேற்படி நிறுவனத்திற்கு நான்தான் நோடல் அலுவலர் என்பதற்கான ஆதாரத்தை போலீசார் என்னிடம் கேட்கவில்லை. நான் முதன்மை நோடல் அலுவலர் அல்ல. என்னிடம் காட்டப்படும் ஆவணத்தின்படி ட்ராயால்

அங்கீகரிக்கப்பட்ட எங்கள் நிறுவனத்தின் நோடல் அலுவலர் ஒரு பி. சுரேஷ்குமார் என்பவர் நோடல் அதிகாரி என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அந்த ஆவணத்தின்படி 2025 ஆண்டில் அவர் நோடல் அலுவலர் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அந்த ஆவணத்தில் ஏர்டெல் ஐபிடிவி நோடல் டீடைல்ஸ் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அதற்கு கீழே மொபைல் சர்வீசஸ் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அந்த ஆவணத்தை வலைதளத்தில் எங்கள் அலுவலக ஆவணங்களுடன் சரிபார்க்கலாம் என்றால் சரிதான். அந்த ஆவணம் உண்மையானதல்ல என்று என்னால் மறுக்க முடியுமா என்றால் அதனை ஆய்வுக்கு உட்படுத்திதான் சொல்ல முடியும். எங்கள் அலுவலகம் கதவு எண் 42/147 மற்றும் 44/146 சாந்தோம் ஹைரோடு அன்ட் ரோசரி சர்ச் ரோடு, மயிலாப்பூர், சென்னை – 04 என்ற முகவரில் உள்ளது. நான் சொன்ன அதே விலாசத்தில்தான் என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் எங்கள் அலுவலகத்தின் விலாசமாக காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி சுரேஷ்குமார். பி என்பவரை எனக்கு நேரில் தெரியும். எங்கள் வலைதள பதிவிலும், ட்ராய் வலைதள பதிவிலும் மேற்படி சுரேஷ்குமார்தான் எங்கள் நிறுவனத்தின் நோடல் அலுவலர் என்றால் அதை சரிபார்த்துதான் சொல்லமுடியும். 2024 ல் மேற்படி நிறுவனத்தில் செந்தில் ஈஸ்வரன் என்பவர்தான் நோடல் அலுவலர் என்றால் அதை சரிபார்த்துதான் சொல்லமுடியும். 2025 ஆகஸ்ட்டில் மேம்படுத்தப்பட்ட ட்ராயால் அங்கீகரிக்கப்பட்ட பட்டியலில் எங்கள் நிறுவனத்தில் மொபைல் சர்வீஸ் நோடல் ஆபீசராக வி. பிரவீன்சேகர் என்பவர்தான் என்னிடம் காட்டப்படும் ஆவணத்தின்படி நியமிக்கப்பட்டுள்ளார் என்றால் அந்த ஆவணத்தில் அப்படித்தான் உள்ளது. அதை சரிபார்த்துதான் சொல்லமுடியும். மேற்படி பிரவீன்சேகர் தற்போதைய முதன்மை நோடல் அலுவலர் என்றால் அதை சரிபார்த்துதான் சொல்லமுடியும். அதனால்

எங்கள் அலுவலகத்தில் முதன்மை நோடல் அலுவலர் யார் என்று தெரியாமல்தான் நான் பணி செய்து வருகிறேன் என்றால் இல்லை. இன்றைய தேதியில் ட்ராயால் அங்கீகரிக்கப்பட்ட ஏர்டெல் நிறுவனத்தின் நோடல் அலுவலர்கள் மூன்று பேர் இருக்கிறார்கள். ஒருவர் மேஜர் கே. குகன்ராஜ் அவரை சர்க்கிள் நோடல் ஆபிசர் என்று சொல்வார்கள். ஆர்.பாலமுருகன் என்பவர் அல்டர்நேட் சர்க்கிள் நோடல் ஆபீசர்/நோடல் ஆபீசர், எம், மணிமாறன் அல்டர்நேட் சர்க்கிள் நோடல் ஆபீசர்/நோடல் ஆபீசர் ஆகிய மூன்று பேர் இருக்கிறார்கள். மேற்படி மூவரும் ட்ராயால் அங்கீகரிக்கப்பட்ட வலைதளத்தில் நோடல் ஆபீசர்கள் என்று பதிவு செய்யப்படவில்லை. நானும், என்னுடன் பணி செய்யும் மேற்படி மூவரும் ட்ராயால் அங்கீகரிக்கப்பட்ட ஏர்டெல் நிறுவனத்தின் நோடல் அலுவலர்கள் அல்ல என்றும், அதனால் பிரவு 65 பின்படி சான்றிதழ் வழங்க எனக்கு தகுதி இல்லை என்றும் சொன்னால் சரியல்ல. முதல் விசாரணையில் குறியீடு செய்யப்பட்டுள்ள ஆவணங்களை அளிப்பதற்கும், அவற்றின் உண்மை தன்மை பற்றி கூறுவதற்கும் நான் தகுதியான நபர் அல்ல என்றால் சரியல்ல. இன்றைய தேதியில் மேற்படி பிரவீன்குமார் என்பவர்தான் ஏர்டெல் நிறுவனத்தின் நோடல் அலுவலர் என்றால் சரிபார்த்துதான் சொல்ல முடியும். மேற்படி பிரவீன்குமார் சாட்சி சொல்ல எனக்கு எழுத்து மூலமான அதிகாரம் அளிக்கவில்லை என்றால் சரிதான். மேற்படி ஜெயக்குமார் என்பவர் ஏர்டெல் நிறுவனத்தில் நோடல் அலுவலராக இருந்ததும் இல்லை என்றும், அவர் மேற்படி நிறுவனத்தில் பணியில் இருந்ததும் இல்லை என்றும் சொன்னால் சரியல்ல. அவரது கையொப்பம் எனக்கு பரிச்சையம் என்று சொல்வதும் உண்மைக்கு புறம்பானது என்றால் சரியல்ல. கைபேசி அழைப்புகள் சர்வருக்குள் பதிவாகும் என்றால் சரிதான். மேற்படி சர்வரை NXTRA என்ற வலைதள

தகவல்கள் சேமிப்பு நிறுவனம் பராமரித்து வருகிறது என்றால் சரியல்ல. எங்கள் நிறுவன கைபேசி அழைப்பு விபரங்கள் மேற்படி சர்வரில்தான் பதிவாகும் என்றால் சரிபார்த்து சொல்லமுடியும். எங்கள் நிறுவன கைபேசி அழைப்புகள் எங்கு பதிவாகியிருக்கும் என்றால் சர்வரில் பதிவாகியிருக்கும். எங்கள் நிறுவன கைபேசி அழைப்புகள் எங்கு பதிவாகியிருக்கும் என்று தற்போதைய நிலையில் என்னால் சொல்லமுடியாது. அதை பராமரிக்கும் நபர் யார் என்று என்னால் சொல்லமுடியாது என்றால் சரிபார்த்து சொல்ல முடியும். அதை நான் பராமரிக்கவில்லை. தகவல் பதிவாகும் சர்வர் எங்குள்ளது என்று எனக்கு தெரியாது என்றால் சரிபார்த்து சொல்லமுடியும். கைபேசி கோபுரங்கள் அமைப்பது என்பது எங்கள் நிறுவனம் சம்பந்தப்பட்டதல்ல. கைபேசி கோபுரங்கள் அமைப்பதற்கு இன்டஸ் டவர்ஸ் என்ற நிறுவனத்தின் ரிஜிஸ்டர்டு வென்டார் இருக்கிறது. நெட்வெர்க்ஸ் மெயின்டனன்ஸ் அன்ட் எரைக்சன் டிபார்ட்மெண்ட் தனியாக எங்கள் நிறுவனத்தில் உள்ளது. அதனால் எந்த எந்த கோபுரம், எந்த எந்த பகுதியில் உள்ளது என்பது எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். அ.சா.ஆ 36 முதல் 38 ஆவணங்களில் கோபுரங்கள் இருக்கும் பகுதியின் பெயர் மற்றும் ஊர் பெயர் குறிப்பிட்டு சொல்லப்படவில்லை என்றால் சரிதான். அந்த ஆவணத்தின் அடிப்படையில் நான் குறிப்பிட்ட கைபேசி எண்கள் எந்த தேதியில் எந்த நேரத்தில், எந்த எந்த கோபுரங்களில் இருந்து பேசினார்கள் என்பதை நேரடியாக பார்த்து அறிந்து கொள்ள முடியாது என்றால் சரியல்ல. அவற்றில் டவர் லொகேஷன் என்ற ஊர் பெயர் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். கைபேசி கோபுரங்களை பொறுத்தவரையில் நகரங்களுக்கு கவரேஜ் தொலைவும், புறநகர் பகுதிகளுக்கு ஒரு கவரேஜ் தொலைவும் இருக்கும் என்றால் சரிதான். டவர் கவரேஜின் தூரம்

சீதோசன நிலை, அப்பகுதியில் உள்ள இடர்பாடுகள் மற்றும் பூமியின் இயற்கை அமைப்புகள் ஆகியவற்றிற்கு ஏற்றவாறு கவரேஜ் தொலைவு மாறுபடும் என்றால் சரிதான். நகர பகுதிகளில் சராசரியாக 1.2 கிமீ வரைதான் டவர் கவரேஜ் இருக்கும் என்றால் சரிதான். நகர பகுதிக்குள் இருந்து அந்த கவரேஜ் தூரத்தை கடந்த பிறகு புறநகர் பகுதிகளில் உள்ள நகரைச் சுற்றியுள்ள விரிவாக்கப்பகுதிக்கு செல்லும்போது நகர பகுதிகளில் உள்ள டவர் மற்றும் புறநகர் பகுதிகளில் உள்ள டவர் இரண்டையும் கைபேசி காட்டும் என்றால் எந்த டவர் கவரேஜிக்குள் கைபேசி உள்ளதோ அந்த டவரைத்தான் காட்டும். புறநகர் பகுதிகளில் டவர் கவரேஜ் என்பது சராசரியாக 5 முதல் 10 கிமீ தூரம் என்றால் தவறு. ஆனால் புற நகர் பகுதிகளில் தூரத்தின் அளவு அதிகமாக இருக்கும். 5 முதல் 10 கிமீ வரை புறநகர் பகுதிகளில் டவர் கவரேஜ் இருக்கும் என்றால் சரிபார்த்து சொல்லமுடியும். மேற்படி டவர்கள் குறித்த தகவல்கள் எங்கள் நிறுவன வலைதளத்தில் தவறாக வராது என்றால் அதைப்பற்றி என்னால் சொல்லமுடியாது. புறநகர் பகுதிகளில் 900 Mhz என்ற அலைவரிசையில் செய்யப்படும் கைபேசி டவர் சேவை 5 முதல் 10 கிமீ வரை கவர் செய்யும் என்றால் சரிபார்த்துதான் சொல்லமுடியும். அதனால் நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்களின்படி மேற்படி கைபேசி எண்கள் மேற்படி கோபுரங்களின் டவர் ஊர் எல்லைக்குள் இருந்து பேசியதாக 100 சதவீதம் அறுதியிட்டு சொல்லமுடியாது என்றால் தவறு சொல்லலாம். அதனால் கழுகாசலபுரம் என்ற ஊரிலுள்ள கோபுரம் எந்த எந்த ஊர்களை தனது சேவைக்குள்ளாக வைத்திருக்கிறதோ அந்த அந்த ஊர்களில் இருந்து பேசினாலும் கழுகாசலபுரம் கோபுரம் வழியாக பேசியதாகத்தான் காட்டும் என்றால் சரிதான். அதனால் அந்த நபர் கோபுரம் இருந்த ஊரிலிருந்து பேசியதாக அறுதியிட்டு சொல்லமுடியாது என்றும், டவர் கவராகும்

ஊர்களில் எங்கிருந்து வேண்டுமானாலும் பேசியிருக்கலாம் என்றும் சொன்னால் சரிதான். அ.சா.ஆ 34 சான்றிதழ் செல்லாத ஆவணம் என்றால் சரியல்ல. சர்வரை யார் பராமரிக்கிறார்களோ அவர்கள்தான் அந்த சான்றிதழை வழங்க முடியும் என்றால் சரியல்ல. தொலைதொடர்பு மற்றும் கணினி வலைதள மற்றும் சேமிப்பு தளங்களை பொருத்தவரையில் நிபுணத்துவம் பெற்ற நபர் வலைதளத்தையும், சர்வர்களையும் முடக்கி தகவல்களை மாற்றி அமைக்கலாம் என்றால் அதைப் பற்றி என்னால் கூறமுடியாது. அ.சா.ஆ 34 ல் MAC விலாசம் இல்லை. அதில் OS என்று குறிப்பிடப்பட்டிருப்பது கணினியின் இயங்குதள மென்பொருள் என்றால் சரிதான். எங்கள் நிறுவன கணினிகளை பொறுத்தவரையில் மைக்ரோ சாப்ட் OS தான் பயன்படுத்துகிறோம் என்றும், எங்கள் நிறுவனம் தனிப்பட்ட முறையில் OS இல்லை என்றும் சொன்னால் சரிதான். எங்கள் நிறுவனத்தை OS தயாரிப்பாளர் என்று சொல்லமுடியாது. அ.சா.ஆ 34 ல் OS தயாரிப்பாளர் பாரதி ஏர்டெல் என்று குறிப்பிடப்பட்டிருப்பது தவறு என்றால் அதை சரிபார்த்து சொல்லமுடியும். அ.சா.ஆ 34 ல் எத்தனை பக்கங்கள், என்ன என்ன ஆவணங்கள், யாரால் எந்த தேதியில் எத்தனை மணிக்கு பதிவிறக்கம் செய்யப்பட்டது என்ற குறிப்பு அதில் இல்லை. அதனால் அ.சா.ஆ 34–ஐ வைத்து அந்த ஆவணம் இந்த வழக்கில் நான் ஆஜர் செய்துள்ள ஆவணங்கள் சம்பந்தப்பட்டதுதான் என்பதை கூற இயலாது என்றால் சரியல்ல. கைபேசி எண்களை வைத்து சொல்லமுடியும். அ.சா.ஆ 34 ல் குறிப்பிடப்பட்டுள்ள கைபேசி எண்களில் என்ன தகவல் பதிவிறக்கம் செய்யப்பட்டு சான்று வழங்கப்பட்டது என்ற குறிப்பு அதில் இல்லை. ஒரு சிம் எண் கொண்ட சிம்கார்டுக்கு சிம் மாடியூல் எண், குறுஞ்செய்தி சேவை, வலைதள சேவை, அந்த சிம்கார்டின் ஹிஸ்டரி (தயாரிப்பு வரலாறு), எப்போது செயல்படுத்தப்பட்டது, செயல்படுத்தப்பட்ட

தேதி ஆகியவற்றை சரிபார்த்து சொல்லலாம். மேற்படி சேவைகளை பொறுத்து என்ன தகவல் பதிவிறக்கம் செய்யப்பட்டது என்ற குறிப்பு அ.சா.ஆ 34 ல் இல்லை என்பதால் அ.சா.ஆ 36 முதல் 38 ஆவணங்களுக்கும், அ.சா.ஆ 34 க்கும் சம்பந்தமில்லை என்றால் சரியல்ல. அ.சா.ஆ 33 ஆவணம் 28.06.2024 தேதியில் எங்கள் நிறுவனம் ஆய்வாளருக்கு கொடுத்த கவரிங் லெட்டர். அதில் 20.06.2024 தேதியிட்ட வேண்டுகோள் கடிதம் ஆய்வாளர் கொடுத்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். 28.06.2024 ல் நாங்கள் அறிக்கை கொடுத்ததாக அ.சா.ஆ 33 ல் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அ.சா.ஆ 36 முதல் 38 ஆவணங்களில் அலுவலக முத்திரையோ, தேதி இல்லை என்றால் சரிதான். அதில் எந்த தேதியில் பதிவிறக்கம் செய்யப்பட்டது என்ற குறிப்பு இல்லை. நான் இந்த வழக்கு சாட்சியப்பட்டியலில் இல்லாத நபர் என்றும், மேற்படி ஆவணங்கள் தேதிகளில் ஆவணத்தை பராமரிக்கும் பணியில் நான் எங்கள் அலுவலகத்தில் இல்லை என்றும், அதனால் அசா.ஆ 34 சான்றிதழ் பொறுத்து சாட்சியம் அளிப்பதற்கு தகுதியான நபர் நான் அல்ல என்றும் சொன்னால் சரியல்ல. போலீசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க மேற்படி ஆவணங்களை தற்போது தயாரித்து தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. தற்போதும் நான் ஏர்டெல் நிறுவனத்தில் நோடல் அலுவலராக பணியில் இல்லை என்றால் சரியல்ல. இல்லாத பணியில் நான் இருப்பதாக நீதிமன்றத்தில் பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. மேற்படி கேள்விகளில் பல கேள்விகளுக்கு சரிபார்த்து சொல்லமுடியும் என்று பதில் தெரியாமல் சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரியல்ல. அதனால்தான் எங்கள் நிறுவனத்தில் உள்ள தற்போதுள்ள தலைமை அதிகாரியின் பெயர் கூட எனக்கு தெரியவில்லை

என்றால் சரியல்ல. நான் எங்கள் அலுவலகத்தின் சார்பாக தயாரிக்கப்பட்ட ட்ராய் அறிக்கைக்கு முரணாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மேற்படி குறுக்கு விசாரணை 1 மற்றும் 3 எதிரிகள் தரப்பில் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

Taken down before me in open court, in the presence of the Accused read over to the witness and admitted by the deponent to be correct

MUNISWAMI THANDAVAN

Digitally signed by MUNISWAMI THANDAVAN
Date: 2026.02.09 17:59:02 +0530

I Additional District& Sessions Judge,
Thoothukudi.